258, M Vincent Perera Mw
Colombo 14
0114700800

**LMD சஞ்சிகையால் இலங்கையில் அதிக விருது பெற்ற நுகர்வோர் தயாரிப்புகள் மற்றும் பன்னாட்டு நிறுவனமாக பெயரிடப்பட்ட யூனிலீவர்**

யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் சிறந்த தயாரிப்புகளை நுகர்வோருக்கு வழங்குவதில் சிறந்து விளங்குகின்ற அர்ப்பணிப்புக் கொண்டது என மீண்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கௌரவம் மிக்க LMD சஞ்சிகையின் தரவரிசையில், இலங்கையில் அதிக விருது பெற்ற (LMD Most Awarded Edition, 2022) நுகர்வோர் தயாரிப்புகள் மற்றும் பன்னாட்டு நிறுவனமாக, இந்நிறுவனம் தொடர்ந்து 3ஆவது வருடமாக பெயரிடப்பட்டுள்ளது.

யூனிலீவர் ஸ்ரீ லங்கா, பாராட்டுக்குரிய 21 விருதுகளின் கௌரவத்துடன், இலங்கையில் அதிக விருது பெற்ற 50 நிறுவனங்களில் ஒன்று எனும் பிரபல பட்டியலில் (Hall of Fame) ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. இந்த சாதனையானது, நிறுவனம் தனது செயற்பாடுகளின் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்க வேண்டுமெனும் அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. அத்துடன், நிறுவனத்தின் வெற்றிக்கான சிறந்த பங்களிப்புகளுக்கான கௌரவ அங்கீகாரத்தை, யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி பெற்றுள்ளார். இலங்கையில் உள்ள சிறந்த 50 நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதம நிறைவேற்றதிகாரிகள் பட்டியலில் அவர் இடம்பெற்றுள்ளார்.

இந்தச் சாதனை குறித்து, **யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி** கருத்துத் தெரிவிக்கையில், *"LMD இனால் இலங்கையில் அதிக விருதுகளைப் பெற்ற நுகர்வோர் தயாரிப்புகள் மற்றும் பன்னாட்டு நிறுவனம் எனும் இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். உயர்தர தயாரிப்புகள் மூலம் எமது நுகர்வோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இந்த பாராட்டு ஒரு சான்றாகும். சிறந்ததைச் செய்ய வேண்டும் அதை நன்றாகச் செய்ய வேண்டும் எனும் எமது தத்துவம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையிட்டு நாம் நன்றியுள்ளவர்களாக உள்ளோம். அத்துடன் எமது முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கான ஒரு தளத்தை வழங்கியமை தொடர்பில் LMD இற்கும் நன்றிகள் உரித்தாகட்டும்."* என்றார்.

இலங்கையில் அதிக விருது பெற்ற நிறுவனங்களின் தரவரிசையானது, நாட்டின் முன்னணி வர்த்தக நிறுவனங்களால் வென்ற விருதுகள், அவற்றின் வர்த்தக நாம பலம், பெருநிறுவன நற்பெயர், நிதிச் செயற்பாடுகள், உணர்வு மிக்க பணிச்சூழல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில், உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் தகுதியான பாராட்டுகளைப்

பெறுவதற்கு வழிவகுத்தது. LMD சஞ்சிகையின் Brands Annual (2022) பதிப்பு, Most Respected (2022) பதிப்பு, LMD 100 (2020/21) விசேட பதிப்புகள், இலங்கையில் சிறந்த பணியிடங்கள் 2021 பதிப்பு ஆகிய பட்டியலிலிருந்து, இந்த நிறுவனங்களின் பட்டியல் தொகுக்கப்பட்டு இந்த ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

யூனிலீவர் ஶ்ரீ லங்காவின் சிறப்பான அர்ப்பணிப்பானது, தனியே அதன் தயாரிப்புகளுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், நிலைபேறான வாழ்வை அனைவருக்கும் பொதுவான ஒன்றாக மாற்றும் நோக்கம் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. Lifebuoy இன் கைகழுவுதல் நிகழ்ச்சி, Signal இன் சிரிப்பு பரவட்டும் நிகழ்ச்சி, Sunlight இன் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்பு திட்டம், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டம், முகவர்கள் மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்கள் உள்ளிட்ட, இலங்கையில் சமூகப் பொறுப்புள்ள ஒரு பெருநிறுவன பிரஜை எனும் நற்பெயரை பெறும் வகையிலான, சமூகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு திட்டங்களில் மும்முரமாக தனது ஈடுபாட்டை நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

நுகர்வோர் பொருட்கள் தொழிற்துறையில் சந்தையில் முன்னோடியாக உள்ள ஒரு நிறுவனம் எனும் வகையில், யூனிலீவர் ஶ்ரீலங்கா நிறுவனம், சிறந்து விளங்குதல், புத்தாக்கம், சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றில் அதன் தரத்தை தொடர்ச்சியாக பேணி வருகிறது.

**~ (Ends) ~**

**Photo Caption:**
யூனிலீவர் ஶ்ரீ லங்கா நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி